O.S.No. 123/2010
15.04.2021

பி.வா.சா.1. திரு.பி.பொன்னுபாண்டி த.பெ. பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ -5 மற்றும் பி.வா.சா.ஆ-10 ஆகிய இரண்டும் ஒரே ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்து பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ-6 ஆகியவற்றின் மூலம்தான் எனது பாத்தியம் என்று எனது எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ-6 ல் எனது பெயர் இல்லை என்றால் சரிதான், என் பாட்டன் வீரணன் மற்றும் எனது அப்பத்தா மீனாட்சி பெயர் உள்ளது. பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ-6 ல் எனது தகப்பனார் பெயரும் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் என் தகப்பனாரின் உடன்பிறந்தவர்களின் பெயரும் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் என் தாத்தா சுப்பையா பெயரும் இல்லை என்றால் சரிதான். என் சித்தப்பா நாராயணன் பெயரும் மேற்படி ஆவணங்களில் இல்லை என்றால் சரிதான். மீனாட்சிக்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மீனாட்சியின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்பபடும் பி.வா.சா.ஆ-1 கொடிவழி ஜாபிதாவில் என் அப்பாவின் உடன் பிறந்தவர்களின் வாரிசு விவரம் சொல்லவில்லை என்றால் சரிதான், சொத்து எங்களுக்கும் மட்டும் பங்கு உள்ளது என்பதால் சொல்லவில்லை. என் அப்பாவின் சித்தப்பாவான ரவியின் வாரிசை பி.வா.சா.ஆ-1- ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அவர்கள் பாகத்தைதையும் சேர்த்து நாங்கள் வாங்கிவிட்டோம். ரவி-யின் பாகத்தை நாங்கள் வாங்கியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான், பட்டா என் அப்பத்தா பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கொடிவழி ஜாபிதா சரியானது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ-16. பி.வா.சா.ஆ-1 ல் என் சித்தப்பா வரரிசு பற்றி குறிப்படிபடவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியரிடம் தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் தனிப்பட்டா கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்களிடம் தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான், என் தம்பி நான் பார்த்து முடித்தால் சரிதான் என்று சொல்லி விட்டதால் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. என் சித்தப்பாவிடேமோ அல்லது அவரின் வாரிசுகளிடமோ அல்லது எனது உடன்பிறந்தவர்களிடமோ தாவா சொத்தை பொறுத்து பாகபத்திரமோ அல்லது விடுதலை பத்திரமோ அல்லது வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா கொடுக்க ஆட்சேபணை இல்லை என்றோ ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தினோமா என்றால் இல்லை, அனைத்தும் வாய்க்கரலாக்ததான் ஏற்பட்டது. என் பெயரில் பட்டா மாறுதல் செய்தவற்கு வட்டாட்சியரிடம் மனு கொடுத்த போது 1ம் வாதி பல ஏக்கருக்கு சொந்தக்காரர் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பழனிகுமார் பெயருக்கு பல ஏக்கர் சொத்து இருந்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா 2 வது இலக்க சொத்தான புல.எண் 338/31 சொத்திற்கு வாதியின் தாயார் மலையாண்டிச்சி பெயர் தான் வா.சா.ஆ-2 பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், பின்னர் பழனிகுமார்

O.S.No. 123/2010

15.04.2021

பி.வா.சா.1. திரு.பி.பொன்னுபாண்டி த.பெ. பாண்டி

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பெயரில் மாறிவிட்டது. அவ்வாறு பழனிகுமார் பெயரில் மாறவில்லை என்றால் சரியல்ல. பட்டா எந்த தேதியில் மலையாண்டிச்சி பெயரில் வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பழனிகுமார் எப்போது சொசைட்டியில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் தெரியாது, அவர் சொசைட்டியில் வேலை செய்ததாக கேள்விபட்டேன். அவர் சொசைட்டியில் வேலைக்கு செல்வதற்கு முன்பே வா.சா.ஆ-2 பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வழக்கிடை சொத்திற்கு தென்புறமாக உள்ள வீட்டை வாதி 40 வருடத்திற்கு முன்பே கட்டிவிட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ல் காட்டப்பட்டுள்ள வாதியின் வீட்டிற்கு தென்புறமும், வடபுறமும் வாசல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ல் காட்டப்பட்டுள்ள வாதியின் வீட்டிற்கு வடபுறம் உள்ள வாசல் வழியாகத்தான் 2 வது இலக்கச் சொத்திற்கு வரமுடியும் என்றால் சரியல்ல. வடபுறம் உள்ள வாசல்படி வழியாக வரவில்லை என்றால் வேறு எந்த வழியில் அவர்கள் ரோட்டிற்கு வருவார்கள் என்றால் தெற்கு பக்கம் உள்ள வாசல் வழியாக வருவார்கள். வாசல்படிக்கு வடபுறமும் வாதிக்கு இடம் உண்டு என்றால் சரியல்ல, 1- ¼ செண்டுக்குள் தான் வரமுடியும். வடக்கு பக்கம் உள்ள வாசல் வழியாக வாதிகள் 2 வது இலக்கச் சொத்திற்கு செல்ல பாதையாகவும் கொட்டம் போட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-16-ல் உள்ள கொடிவழி ஜாபிதாவில் என் பெயர் பெரியகருப்பன் வாரிசாக உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்த வித பாத்தியமோ, அனுபவமோ, ஆவணங்களோ கிடையாது என்றால் சரியல்ல. வட்டாட்சியர் எனக்கு வேண்டியவராக இருந்தததை பயன்படுத்தி எனது செல்வாக்கையும் பயன்படுத்தி மோசடியாக பட்டா உத்தரவு பெற்றுள்ளேன் என்றாலும், அது செல்லாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.

மறுவிசாரணை இல்லை.